
# நற்றமிழ்க்குடில்

தமிழால் தழைக்கும் உலகு

**மாணவ இலக்கிய இதழ்**

குடில் : 2 டிசம்பர் 2019 விருந்து : 4



சோகா தமிழ்ப்பேரவை

**சோகா தமிழ்ப்பேரவை வெளியீடு**

- தனிச்சுற்று -

# நற்றமிழ்க்குடில்

டிசம்பர் 2019

ஆசிரியர் குழு : மு. சத்யா
முதுகலைத் தமிழ் இரண்டாமாண்டு

அ. ஸ்டெல்லா மேரி
அ. பர்ஸானா
ஆ. வள்ளி
இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

அ. உமா மகேஸ்வரி
சா. யோகேஸ்வரி
இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு

ஆலோசனைக் குழு : டாக்டர் சேது குமணன்
கல்லூரித் தலைவர்

முனைவர் ம.சம்ஷாத்
கல்லூரி முதல்வர்

பேராசிரியர் சே.கண்மணி
தமிழ்த்துறைத் தலைவர்

தமிழ்த்துறைப் பேராசிரியர்கள்

வெளியீடு : சோகா தமிழ்ப்பேரவை
சோகா இகெதா கலை மற்றும் அறிவியல்
மகளிர் கல்லூரி, சென்னை - 600 099.

விலை : ரூ.10/-

அச்சு : "ஸ்பெஷல் எபெக்ட்ஸ்"
மறுதோன்றி அச்சகம், அம்பத்தூர்
பேசி : 9282142789

# நற்றமிழ்க்குடில்

மாணவ இலக்கிய இதழ்

குடில் : 2 விருந்து : 4

சோகா தமிழ்ப்பேரவை வெளியீடு

டிசம்பர் 2019

## உள்ளே........

தலையங்கம்

தோழிக்குக் கடிதம்

அறிவோம் அறிஞரை

நூல் அறிவோம்

கட்டுரை

மேற்கோள்


விடுகதைகள்

மலரே..மலரே

உறவுகள் மேம்பட..

கவிதை

தூரிகைத் தூரல்கள்




# தேசிய ஒருமைப்பாட்டு தினம்

தேசிய ஒருமைப்பாடு என்பது நாட்டு மக்களின் ஒற்றுமையைக் குறிப்பது ஆகும். மக்கள் மதம், இனம், மொழி என வேறுபட்டு இருந்தாலும் அவர்கள் "ஒரே நாட்டினர்" என்பது தான் பெருமை.

உலக அளவில் பார்க்கும் போது இந்தியா மக்கள் தொகையில் இரண்டாம் இடத்தில் உள்ளது. மேலும் இந்தியாவில் 1652 மொழிகள் பேசும் மக்கள் உள்ளனர். ஒவ்வொரு மனிதனின் உணவு, பண்பாடு வேறுபட்டு இருந்தாலும் அவர்கள் இந்தியர்கள். மேலும், உலக அமைதி நாடுகளில் இந்தியாவும் ஒன்று ஆகும்.

"முப்பது கோடி முகமுடையாள் உயிர்
மொய்ம்புற வொன்றுடையாள் - இவள்
செப்பு மொழி பதினெட்டுடையாள் எனில்
சிந்தனை ஒன்றுடையாள்"

- என்ற பாரதியின் பாடல் வரிகள் பாரத தேசத்தின் ஒற்றுமையை எடுத்துரைக்கிறது.

தேசிய ஒருமைப்பாட்டு தினம் நவம்பர்-19ஆம் தேதி கொண்டாடப்படுகிறது. இதில், நவம்பர்-19 ஆம் தேதி நம் இந்திய முன்னாள் பிரதமர் இந்திராகாந்தி அவர்களின் பிறந்த நாள் என்பது குறிப்பிடத்தக்கது.

## தேசிய ஒருமைப்பாட்டு தினத்தின் நோக்கங்கள்:-

- தேசிய ஒருமைப்பாட்டு தினம் மக்களின் ஒற்றுமை, அன்பு, அமைதி, சகோதரத்துவம் போன்றவற்றை ஊக்குவிக்கக் கொண்டாடப்படுகிறது.

- எல்லா மதத்தைச் சார்ந்த மக்களை அவர்களின் பண்பாடு, பொருளாதாரம், கல்வி என எல்லாவற்றிலும் சமமாக எண்ண வைப்பதற்காக கொண்டாடப்படுகிறது.


- மேலும், மக்களின் ஒற்றுமையை மேம்படுத்துவதற்கே இந்த தினம் கொண்டாடப்படுகிறது.

தீண்டாமை, மொழியைக் கற்கத் தடை, சமூக நிலை போன்றவற்றால் சில சமயங்களில் ஒற்றுமையாக வாழ இயலாமல் இருந்தது. அதனைத் தடுக்க, அரசு சார்பில் பல திட்டங்கள் கொண்டு வரப்பட்டது. நம் நாட்டில் எப்போதும், அரசியல் சார்பில் ஒற்றுமை ஏற்படவில்லை. ஆனால், அரசியல் சார்பிலும் 1947ஆம் ஆண்டு ஒற்றுமையாக இருந்ததால் தான் ஆங்கிலேயரிடம் இருந்து சுதந்திரம் கிடைத்தது.

நாம் இன்று ஒற்றுமையாக இருப்பதை உறுதி செய்யும் சின்னங்களாக தேசியக் கொடி, பண்டிகைகள், தேசிய கீதம், தேசிய சின்னம் எனப் பல உள்ளன.

தேச முன்னேற்றத்திற்கு தேசிய ஒருமைப்பாடு மிகவும் அவசியம் ஆகும். தேச ஒருமைப்பாட்டைக் கல்வியால் தான் வளர்க்க முடியும். ஒற்றுமை, நாட்டுப்பற்று, நாட்டு நலம் பற்றிய உணர்வை மாணவர்களிடம் வளர்க்க வேண்டும். மாணவர்களுக்கு ஒற்றுமை பற்றி கற்றுக் கொடுத்தால் மட்டுமே நாட்டின் ஒருமைப்பாடு முன்னேற்றம் அடையும்.


"வேற்றுமை என்னும் விதையை வேரோடு அறுத்து;
ஒற்றுமை என்னும் விதையை மண்ணில் ஊன்றச் செய்வோம்!"



**சா.யோகேஸ்வரி**
இளங்கலைத் தமிழிலக்கியம்
இரண்டாமாண்டு.



# தோழிக்குக் கடிதம்...



அன்புள்ள கோமதி,

உன் தோழி ஜெயஸ்ரீ எழுதுவது. நான் இங்கு நலம். அங்கு நீயும் உன் பெற்றோரும் நலமா? சென்ற மாதம் நாம் இருவரும் சந்தித்த பொழுது உனது ஊரில் நடைபெறும் கீழடி அகழ்வாராய்ச்சியை நேரில் காண வருமாறு அழைத்தாய். ஆனால் எனக்கு அங்கு வருவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

ஆனால் கீழடியைப் பற்றி அறிவதற்கான வாய்ப்பு எனக்கு கிடைத்தது.


எனது கல்லூரியில் (19.10.2019) சனிக்கிழமை அன்று "இலக்குவனார் இலக்கியப் பேரவை" நடைபெற்றது. இந்த நிகழ்வானது மாதம் ஒருமுறை நடைபெறும். இந்த மாத நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினராக "கவிஞர் மில்டன்" அவர்கள் வருகை புரிந்தார். "கீழடி ஒரு பார்வை" என்ற தலைப்பில் அவர் உரையாற்றினார். 3600 ஆண்டு பழைமையானது தமிழ்மொழி என்றும், கீழடி அகழ்வாராய்ச்சியில் அக்காலத்து கைவிரல் மோதிரம் ஒன்று கிடைத்ததாகவும் அந்த மோதிரத்தில் சிவப்பு நிறக்கல் பதிக்கப்பட்டு இருந்தது என்றும் அதனுள் காட்டுப்பன்றியின் உருவம் வரையப்பட்டு இருந்தது என்றும், இதன் மூலம் தமிழர்களின் நுண்ணறிவு வெளிப்படுகின்றது என்றும் கூறினார். அவர் ஆற்றிய உரையில் கீழடியை நேரில் கண்டது போன்ற எண்ணமும் மன நிறைவும் பெற்றோம்.

அது மட்டுமின்றி அன்றைய நிகழ்வில் திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் பொதுச் செயலாளர் சுப.வீரபாண்டியன் ஐயா அவர்களும் வருகை புரிந்தார். அவர் "நம் வாழ்க்கை நம் கையில்" என்ற தலைப்பில் இன்றைய இளைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் உரையாற்றினார்.

எனக்கு பயன் உள்ளதாக அமைந்த இந்தப் பேரவை பற்றிய செய்தியை உன்னிடம் பகிர்ந்து கொண்டது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. அங்கு கீழடி நிகழ்வுகளை நேரில் காணும் நீ அங்கு நடக்கக் கூடிய செய்தியை எனக்கு அடுத்த கடிதத்தில் எழுத வேண்டும். உனது பதில் கடிதத்துக்கு காத்துக் கொண்டு இருக்கிறேன்.

இப்படிக்கு உன் அன்பு தோழி

சே.ஜெயஸ்ரீ



# குப்பைகள்

குப்பைக்குள் மாட்டிக் கொண்டேன் மக்காத
மக்கள் குப்பைக்குள் மாட்டிக் கொண்டேன்!
மக்காத குப்பையில் மக்கும்உடல் குப்பைக்கு
பொன்மாலையா?

பாரம்பரிய பரமபதம் மறந்துவிட்டதா?
ஆயின் நம்பிக்கை ஏணியைக் கொண்டு
நாம் உயரும்போது நம்மை விழுங்க
காத்திருக்கும் பாம்பு யார்?

குப்பைகளின் பெருங்குப்பையை தேர்ந்தெடுக்க
வேண்டுமோ விரல்?
ஏழையின் கண்ணீரால் காலைக்கழுவும் குப்பையின்
நாற்றம் வீசவில்லையா?

உயிரை உருக்கவில்லையா?
உடல் குப்பையில் வரும் சிரங்கும் நாமே!
அச்சிரங்கை நீக்கும் குப்பைமேனியும் நாமே!

- **ஸ்ரீஜோதிகா**
முதலாமாண்டு வணிகவியல்



# உ.வே.சாமிநாதையர்

(பிப்ரவரி 19, 1855 - ஏப்ரல் 28, 1942)

உத்தமதானபுரம் வேங்கடசுப்பையர் மகன் சாமிநாதன் சுருக்கமாக உ.வே.சா. இவர் சிறப்பாக தமிழ்த் தாத்தா என அறியப்படுகிறார். இவர் ஒரு தமிழறிஞர். அழிந்து போகும் நிலையிலிருந்த பண்டைத் தமிழ் இலக்கியங்கள் பலவற்றைத் தேடி அச்சிட்டுப் பதிப்பித்தவர். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழுக்குத் தொண்டாற்றியவர்களுள் உ.வே.சாமிநாதன் குறிப்பிடத்தக்கவர். தமது அச்சுப் பதிப்பிக்கும் பணியினால் தமிழ் இலக்கியத்தின் தொன்மையையும், செழுமையையும் அறியச் செய்தவர். உ.வே.சா. 90க்கும் மேற்பட்ட புத்தகங்களை அச்சுப் பதித்தது மட்டுமின்றி 3000க்கும் அதிகமான ஏட்டுச் சுவடிகளையும் கையெழுத்தேடுகளையும் சேகரித்தார்.

## உ.வே.சா. பதிப்பித்த முதல் புத்தகம்:-

பாண்டிய நாட்டில் செவந்திபுரத்தில் **வேணுவனலிங்கத் தம்பிரான்** கட்டிய மடாலயத்திற்கு சுப்பிரமணிய தேசிக விலாசம் என்று பெயர். இவ்வழகிய மடாலயத்தைச் சிறப்பித்து பல தமிழ்ப் புலவர்கள் பாடலியற்றிருந்தனர். இப்படி 86 பாடல்கள் இருந்தன. உ.வே.சா. 8 பாடல்கள் இயற்றினார். வேறு சில பாடல்களும் சேர்த்து திருநெல்வேலி முத்தமிழாகர மென்னும் அச்சுக் கூடத்தில் இப்பாடல் திரட்டை முதன் முதலாக ஐயரவர்கள் பதிப்பித்தார்.

## பட்டங்கள்:-

உ.வே.சா. தமிழுக்கும் இலக்கியத்துக்கும் ஆற்றிய பங்களிப்பினைப் பாராட்டி மார்ச் 21, 1932 அன்று சென்னைப் பல்கலைக்கழகம் மதிப்புறு முனைவர் பட்டம் அளித்தது. இது தவிர, மகாமகோபாத்தியாய (ம) தக்ஷிண கலாநிதி எனும் பட்டமும் பெற்றுள்ளார். இந்திய அரசு பிப்ரவரி 18, 2006ஆம் ஆண்டில் இவரது நினைவு அஞ்சல் தலை வெளியிட்டது.


## அச்சு பதித்த நூல்கள்:-

சீவக சிந்தாமணி, மணிமேகலை, சிலப்பதிகாரம், புறநானூறு, திருமுருகாற்றுப்படை, பத்துப்பாட்டு, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக் காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம், 12 புராணங்கள், பெருங்கதை, 9 உலா நூல்கள், 6 தூது நூல்கள், 3 வெண்பா நூல்கள், 4 அந்தாதி நூல்கள், 2 பரணி நூல்கள், 2 மும்மணிக் கோவை நூல்கள், 2 இரட்டை மணிமாலை நூல்கள், அங்கயற்கண்ணி மாலை, இதர சிற்றிலக்கியங்கள் 4[7].



கே.மஞ்சு
முதுகலை முதலாமாண்டு.

# கவிதை . . .



*மனிதன் தன் ஐந்து வயதில் விரல்களை எண்ணினான்.*
*பத்து வயதில் எண்களை எண்ணினான்.*
*பதினைந்து வயதில் மதிப்பெண்களை எண்ணினான்.*
*இருபது வயதில் தேர்வு வினாக்களை எண்ணினான்.*
*இருபத்து ஐந்து வயதில் தன் சம்பளத்தை எண்ணினான்.*
*முப்பது வயதில் நண்பர்களை எண்ணினான்.*
*முப்பத்து ஐந்து வயதில் தன் பிள்ளைகளை எண்ணினான்.*
*நாற்பது வயதில் கடன்களை எண்ணினான்.*
*நாற்பத்து ஐந்து வயதில் தனக்கான நோய்களை எண்ணினான்.*
*ஐம்பதாவது வயதில் தன் சொந்துங்களை எண்ணினான்.*
*ஐம்பத்து ஐந்தாவது வயதில் தனக்கான மாத்திரைகளை எண்ணினான்.*
*அறுபதாம் வயதில் தன் பேரக் குழந்தைகளை எண்ணினான்.*
*பிறகு ஒவ்வொரு நாளும் தன் வாழ்க்கையின் வயதை எண்ணினான்.*
*தான் இறந்தபின் அழக்கூடிய சொந்துங்களை எண்ணினான்.*
*வாழ்க்கை முழுவதும் கணிதம் தான் இருந்தாலும்*
*தொடக்கமும் முடிவும் என்னவோ பூஜ்ஜியம்தானே.*

**அ.பர்கத் பர்சானா பாத்திமா.**
இளங்கலை ஆங்கிலம் - மூன்றாமாண்டு.

நூலின் பெயர் : **"ஏ.எம்.வி.மாத்தியோசி கவிதைகள்"**
நூலாசிரியர் : கவிஞன் மில்டன்
வெளியீட்டு நாள் : 17.08.2019

**ஏ.எம்.வி.** மாத்தியோசி கவிதைகளை கவிஞர் மில்டன் அவர்கள் படைத்துள்ளார்.

இவர் "திருநங்கை" என்ற கவிதை முதலாகக் கொண்டு "விவசாயி" என்ற கவிதையை இறுதியாகக் கொண்டு மொத்தம் "40" கவிதைகளை இந்நூலில் படைத்துள்ளார்.

கவிஞர் மில்டன் அவர்கள் இந்நூலில் தன் ஏற்புரையாகக் கொண்டு சிலவற்றைக் கூறியுள்ளார்....

மாத்தியோசி என்பது மாறுபட்டு யோசிப்பது மட்டுமல்ல, மனிதனை நேசிப்பது, மனித நேயத்தை சுவாசிப்பது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

படைப்பென்பது படைப்பாளிக்கு பிரசவம் போன்றதென்பர் என்றும், இந்நூலானது என் முதல் பிரசவம் அதுவும் சுகப் பிரசவம் எனவும் கூறியுள்ளார்.

இவருடைய கவிதை நூலில் நான் படித்ததில் எனக்கு மிகவும் பிடித்த கவிதைகள் சில........

**கவிதைகள் :-** "திருநங்கை"

"வல்லினத்திற்கும்
மெல்லினத்திற்கும்
இடைப்பட்ட
இடையினம்.
சமூகத்தால்
இடர்பட்ட இனம்.
.... ....."

**"கடவுளின் குழந்தைகள்"**

"கடவுளின்
குழந்தைகளாம்

நாங்கள்.

அவரும்
ஒருவிதத்தில்
அனாதை தான்....
.... ......

அனாதையான
நாங்கள்
அம்மாவை
மட்டும்
தேடவில்லை.
தேடுகிறோம்
அன்பையும்
அரவணைப்பையும்."

**"கருக்கொலை"**

"கருவறைக்குள்
கட்டப்பட்ட
கல்லறை....

திட்டமிட்டு
அரங்கேறிய
படுகொலை.....

கருணைக்
கொலையல்ல
கருக்கொலை......"

**"முதல் பள்ளி"**

நீ
என்
முதல்
பள்ளிக் கூடம்!!!

நிகழ்கால
நினைவுகள்
தள்ளிப் போகும்!!!

"மறுபிறப்பு"

இறப்பு முடிவல்ல....
இனி எல்லாம் தொடக்கமே!!!

"ஹைக்கூ கவிதைகள்"

பிச்சைக்காரன்
கட்டிய கோபுரம்
சில்லறையில்.......

இவ்வாறு இவருடைய கவிதைகள் படிப்பதற்காக மட்டுமல்லாமல், படிப்பவர்களை சிந்திக்கவும் வைக்கிறது. இவரின் கவிதையானது மனதை கவர்வதாகவும் ஒரு சில கவிதைகள் இன்பத்தைத் தருவதாகவும் அமைகின்றது.

பா.கோகிலா
இளங்கலைத் தமிழிலக்கியம்
மூன்றாமாண்டு.

# பழமொழி

## வர வர மாமியார் கழுதை போல் ஆனாளாம்...



**பொருள் :** அழகாக / அறிவாக நடக்கும் ஒருவர் நாளடைவில் மாறி நடந்தால் இப்படி சொல்வார்கள்.

**உண்மையான பொருள் :**

வர வர மாமியார் கயிதை போல ஆனாளாம். கயிதை என்பது ஊமத்தங்காயை குறிக்கும். ஆரம்பத்தில் ஊமத்தம் பூவாக இருக்கும்போது பார்க்க அழகாக இருக்கும். பின்னர் நாளாக நாளாக அது காயாக மாறி, சுற்றிலும் முள் போல இருக்கும். கொடிய விஷம் கொண்டது. அது போல மாமியார் பேசுவதும், நடப்பதும் நாளாக நாளாக கயிதை போல இருக்கும் என்று அர்த்தம்.





# உலக அதிசயம் சீனப் பெருஞ்சுவர்

ஜெ.நிஷாந்தி
இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு

இயற்கை அன்னை நமக்கு அளித்த அதிசயங்கள் ஏராளம். மேலும், அறிவியல் வளர்ச்சியாலும் நாகரீக மேம்பாட்டாலும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் உலக அதிசயங்கள் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. உலக வியக்கும் அதிசயங்கள் ஏழு என்று பண்டைக் கால முதல் கருதப்பட்டு வருகிறது. அவற்றுள் இன்று ஒரு சில தவிர மற்றவை அழிந்து விட்டன. உலக அதிசயங்கள் என்பவை அது அமைந்திருக்கும் இடத்தையும், கலாச்சாரத்தையும், கலைத் தன்மையையும், பிரதிபலிக்கும். இவை பல நூறு வருடங்கள் வரலாறு கொண்டவை. உலகின் ஏழு அதிசயங்களுள் ஒன்று தான் சீனப் பெருஞ்சுவர். சீனாவில் உள்ள மிகவும் நீளமான நெடுஞ்சுவர் செயற்கை அரணாக அமைந்துள்ளது. இச்சுவர் சீனர்வின் வடப்புறத்தில் மங்கோலியாவிற்கு எல்லையோரமாக அமைக்கப்பட்டது. மங்கோலியர்கள் நாகரீகமற்ற நாடோடி வாழ்க்கை வாழ்ந்தார்கள். சீனாவிற்குள் அவர்கள் புகுந்து அடிக்கடி கொள்ளை அடித்தும் துன்புறுத்தியும் வந்தார்கள். சீனா அப்போது ஒரே நாடாக இல்லாமல் சிறு சிறு பகுதிகளாகப் பிரிந்து இருந்தது. ஆதலால் எல்லையோரமாக இருக்கும் சிறு சிறு நகரங்களும், கிராமங்களும் மங்கோலியரின் தொல்லைகளில் இருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள பெரிய சுவர்களைப் பாதுகாப்பு அரண்களாகக் கட்டிக் கொண்டார்கள். பின்னர் சீனாவை ஆண்ட ஷ்யு வாங்டி என்ற மன்னர் தான் சீனாவை ஒன்றுபடுத்தினார். பல்லாயிரக்கணக்கான வேலையாட்களை வைத்துக் கொண்டு 15 ஆண்டுகளில் சுவர்களைக் கட்டி முடித்தனர்.

சீனப் பெருஞ்சுவர் பல்வேறு காலப் பகுதிகளில் கல்லாலும், மண்ணாலும் பல பகுதிகளாகக் கட்டப்பட்டது. இச்சுவரின் முக்கிய நோக்கம் ஆட்கள் நுழைவதைத் தடுப்பதும், எதிரிகள் குதிரைகளை கொண்டு வராமல் தடுப்பதும் ஆகும். சந்திரனுக்குச் சென்ற விண்வெளி வீரர்கள் சந்திரனில் இருந்து பூமியைப் பார்த்த போது அவர்களுக்கு எண்ணற்ற இயற்கை வளங்களான கடல்கள், மலைகள் தெரிந்தாலும் செயற்கையாக மனிதனால் அமைக்கப்பட்ட சீனப் பெருஞ்சுவர் ஒன்று மட்டுமே பார்த்ததாகத் தெரிவித்துள்ளார்கள் என்றால் இச்சுவரின் பெருமையை என்னென்று கூறுவது.


# சிறப்பு தினங்கள்

**நவம்பர்**


| | | |
|---|---|---|
| 11 | - | தேசிய கல்வி தினம் |
| 14 | - | குழந்தைகள் தினம்/நேரு பிறந்த தினம் |
| 19 | - | இந்திய ஒருமைப்பாட்டு தினம் |
| 26 | - | இந்திய அரசியல் அமைப்பு தினம் |
| 16 | - | சர்வதேச சகிப்புத் தன்மை தினம் |
| 17 | - | சர்வதேச மாணவர் தினம் |

**டிசம்பர்**

| | | |
|---|---|---|
| 1 | - | உலக எய்ட்ஸ் தினம் |
| 4 | - | உலக கடற்படை தினம் |
| 6 | - | அம்பேத்கார் நினைவு தினம் |
| 7 | - | கொடி நாள் |
| 10 | - | மனித உரிமை நாள் |
| 14 | - | தேசிய சக்தி பயன்பாட்டு தினம் |
| 23 | - | விவசாயிகள் தினம் |
| 24 | - | எம்.ஜி.ஆர். நினைவு தினம் |
| 22 | - | தேசிய கணித தினம் |



# மேற்கோள்



1. "அலங்குளைப் புரவி ஐவரோடு சினைஇ
   நிலந்தலைக் கொண்ட பொலம் பூந் தும்பை"

   \- முரஞ்சியூர் முடிநாகராயர்

2. "நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன
   சாதலும் புதுவ தன்றே;"

   \- கணியன் பூங்குன்றன்

3. "இல்லறம் அல்லது நல்லறம் அன்று
   ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்"

   \- கொன்றை வேந்தன்

4. "ஆனை ஆயிரம் அமரிடை வென்ற
   மாணவனுக்கு வகுப்பது பரணி"

   \- சயங்கொண்டார்

5. "தமிழன் என்றொரு இனமுண்டு
   தனியே அவர்க்கொரு குணமுண்டு"

   \- நாமக்கல் கவிஞர்

6. "தூங்கும் போது வருவது அல்ல கனவு
   நம்மை தூங்க விடாமல் செய்வதே கனவு" என்கிறார்

   \- டாக்டர் அப்துல்கலாம்

7. "நேரத்தை வீணாக்கும் போது கடிகாரத்தைப் பார்
   ஓடுவது முள் அல்ல உன் வாழ்க்கை"

   \- விவேகானந்தர்

8. "தேசியமும் தெய்வீகமும் எனது இரு கண்கள்"

   \- பசும்பொன் உ.முத்துராமலிங்கத் தேவர்

மு.சந்தியா

இளங்கலைத் தமிழிலக்கியம் - மூன்றாமாண்டு.



# விடுகதைகள்

1. சில இடங்களில் ஒட்டப்பட்டிருக்கும் அதை வாசித்தால் அதன் அர்த்தம் முறிந்து விடும். அது என்ன?

2. இறக்கையை விட மென்மையானது ; ஆனால் உலகின் பலமிக்க மனிதராலும் சில நிமிடங்கள் பிடித்து வைத்திருக்க முடியாது. அது என்ன?

3. இளமையில் உயரம் முதுமையில் குட்டை. அது என்ன?

4. கல் எறிந்தால் போதும் அரண்மனையே காலியாகிவிடும். அது என்ன?

5. இலை இல்லை, பூ இல்லை, கொடி உண்டு. அது என்ன?

6. உயிர் இல்லாத நீதிபதியிடம் ஒழுங்கான நியாயம். அது என்ன?

7. இவன் வாலுக்கு வையகமே நடுங்கும். அவன் யார்?

8. ஊரெல்லாம் ஒரே விளக்கு அதற்கு ஒரு நாள் ஓய்வு. அது என்ன?


9. சிவப்புப் பைக்குள் சில்லறை கொட்டிக் கிடக்குது. அது என்ன?

10. ஒரு சிறு தூசி விழுந்தாலும் கலங்கிப் போகும் இந்தக் குளம். அது என்ன?

11. சின்னப் பையனுக்குப் படுக்க வீட்டளவு பாய் வேணும். அவன் யார்?

12. விடிய விடிய வேலை செய்பவனுக்கு ஒரு கை சின்னதாம். அவன் யார்?

விடை :
1. அமைதி, 2. மூச்சு, 3.மெழுகுவர்த்தி 4.தேன்கூடு, 5.கைரேகை, 6. தராசு 7. தேள், 8.நிலா, 9.மிளகாய், 10.கண், 11. சிலந்திவலை, 12. கடிகாரம்



# அனிச்சம்

"அனிச்சம்" பூக்கள் மிகவும் மென்மையான இதழ்களை உடையன. முகர்ந்து பார்த்தவுடனேயே இதழ்கள் வாடிவிடக் கூடிய இயல்புடையது இந்தப் பூ. இதன் பூக்கள் செம்மஞ்சள், நீலம் ஆகிய நிறங்களில் காணப்படும். சூரியன் உதித்ததும் அதன் பூக்கள் மலரத் தொடங்கும்.

"அனிச்சம்" சங்க நூல்கள் குறிப்பிடும் மலர்களில் ஒன்று. மகளிர் குவித்து விளையாடிய 99 மலர்களில் ஒன்றாகக் குறிஞ்சிப்பாட்டு நூல் குறிப்பிடுகிறது. நீலம், அல்லி, அனிச்சம், முல்லை, நறவு ஆகிய மலர்களைத் தலையில் அணியும் கன்னியாகவும் கழுத்தில் அணியும் மாலையாகவும் தொடுத்து அணிந்து கொண்டனர் என்று கலித்தொகை குறிப்பிடுகிறது.

"மோப்பக் குழையும் அனிச்சம் முகம் திரிந்து
நோக்கக் குழையும் விருந்து."


"நான்நிரை வாழி அனிச்சமே நின்னினும்
அனிச்சமும் யாம் வீழ்பவள்."

"அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம்."


என்று திருக்குறள் அனிச்ச மலரை வியந்து குறிப்பிடுகிறது.

**ம.சந்திரலேகா**
தமிழ் இலக்கியம்-மூன்றாமாண்டு.

கட்டுரை



# உறவுகள் மேம்பட....



நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கிறவர்களோடு வாழ விரும்புவீர்களா? எப்போதும் சோகமாக இருக்கிறவர்களோடு வாழ விரும்புவீர்களா? மகிழ்ச்சியாக இருப்பவரோடுதான் வாழ விரும்புவீரகள். மறந்து விடாதீர்கள் அனைவருமே அதைத்தான் விரும்புகிறார்கள்.

## உறவுகள் மேம்பட :

தனிமனிதருக்கு அவரது வாழ்க்கைத் துணைவர், குழந்தை, சொந்தபந்தம், பெற்றோர், பக்கத்து வீட்டுக்காரர் என்று தொடங்கி அவரது நண்பர், அவரது பகைவர், அனைவருமே அவருடைய உறவு வட்டத்திற்குள் வருபவர்தான். இத்தனை உறவுகள் எதற்காக என்று கேள்வி எழலாம். ஒரு மனிதருக்கிருக்கும் விதவிதமான தேவைகளை நிறைவு செய்வதற்காகவே விதவிதமான உறவுகள் உருவாகின்றன. உடல் சார்ந்து, உணவு சார்ந்து, சமூகம் சார்ந்து, பொருளாதாரம் சார்ந்து, உலகியல் சார்ந்து மனிதனுக்கு எவ்வளவு தேவைகள் உண்டோ அவ்வளவு உறவுகள் உருவாவது இயற்கை. ஒரு குறிப்பிட்ட உறவுமுறை அதற்குரிய தேவையை நிறைவு செய்யாத பட்சத்தில் அந்த உறவு செயலிழக்கிறது. உங்கள் வாழ்வில் நிகழும் விதம்விதமான செயல்பாடுகளுக்கேற்ப விதவிதமான உறவுகள் அமைகின்றன.

ஒவ்வோர் உறவையும் நீங்கள் ஒவ்வொரு விதமாகக் கையாள வேண்டியிருக்கிறது. உங்கள் குழந்தையை கையாள்கிற விதத்தில் உங்கள் பெற்றோரை கையாள முடியாது. எனவே, இத்தனை

உறவுகளையும் ஒரு சேர கையாள்வதென்பது பந்துகளை ஒரே நேரத்தில் வீசிப் பிடிப்பதைப் போன்றது. உங்கள் கைகளில் ஒரேயொரு பந்து இருக்கும் என்றால் எளிதாக இருக்கும். ஒரே நேரத்தில் பத்து பந்துகளை வீசிப்பிடிக்க வேண்டும். ஒன்றைக் கூட நழுவவிடக் கூடாது என்றால் அது எவ்வளவு சிரமமானது. ஒரே நேரத்தில் பல உறவுகளைக் கையாள்வது என்பது இப்படித்தான்.

ஒரு மனிதர் ஒரே நேரத்தில பத்து பந்துகளை வீசிப்பிடிக்கும் போது அவரால் வேறெதிலும் கவனம் செலுத்த முடியாது. நீங்கள் உறவுகளை கையாள்கிற சூழலும் இப்படித்தான் இருக்கிறது. மேன்மையான உறவுகள் மலர வேண்டும் என்றால் ஒரு மனிதர்க்காக இன்னொருவரைத் தேடுவதற்கு முன் தனக்குள் ஆழமாகப் பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியம். உங்கள் உறவுகள் ஆனந்தத்தைப் பகிர்ந்து கொள்ளும் வழியாக இருக்கும் போது, உறவுகளைக் கசக்கிப் பிழிய வேண்டிய அவசியம் உங்களுக்கு இருக்காது.

எல்லோரோடும் மிக அற்புதமான உறவுகளை உங்களால் மேற்கொள்ள முடியும். மனிதர்களுக்கு உறவுகள் வழியே சிக்கல்கள் ஏன் ஏற்படுகின்றன? அவர்கள், தங்கள் வாழ்வை மேம்படுத்திக் கொள்ள உறவுகளைப் பயன்படுத்தாமல், வாழ்க்கையிலிருந்து இடைவெளிகளை நிரப்புவதற்கே உறவுகளைப் பயன்படுத்துகிறார்கள். நீங்கள் மகிழ்ச்சியாக இருந்தாலும், அதனை யாருடனாவது பகிர்ந்து கொள்ள வேண்டியிருக்கிறது. வருத்தமாக இருந்தாலும் அதனை யாருடனாவது பகிர்ந்து கொள்ள வேண்டி இருக்கிறது.

உலகியல் சார்ந்த தேவைகளைப் பொறுத்த வரையில் அனைவருமே ஒருவரை ஒருவர் சார்ந்து தான் வாழ வேண்டி இருக்கிறது. வாழ்க்கை பலரையும் சார்ந்து இருக்கிறது என்பதால் தான் உறவுகளை நாம் உருவாக்கினோம்.

மனிதன் தன் அறிவியல் ஆற்றல் மூலம் வாழ்க்கையை வசதியாக்கிக் கொண்டான். ஆனால் இனிமையாக்கிக் கொள்ள தவறி விட்டான். இனிய வாழ்க்கைக்கு சுகமான உறவுகள் அவசியம். அது மேம்பட வழி காட்டுகிறது. இந்த 26 வார்த்தைகள்.

A Appreciation

மற்றவர்களின் நிறைகளை மனதாரப் பாராட்டுங்கள்.

B Behaviour

புன்முறுவல் காட்டவும் சிற்சில அன்புச் சொற்களைச் சொல்லவும் கூட நேரம் இல்லாதது போல் நடந்து கொள்ளாதீர்கள்.

C Compromise

அற்ப விஷயங்களைப் பெரிது படுத்தாதீர்கள். மனம் திறந்து பேசி தீர்த்துக் கொள்ளுங்கள்.

D Depression

மற்றவர்கள் புரிந்து கொள்ளவில்லையே என்று சோர்வடையாதீர்கள்.

E Ego

மற்றவர்களை விட உங்களை உயர்வாக நினைத்துக் கொண்டு கர்வப்படாதீர்கள்.

F Forgive

கண்டிக்கக்கூடிய அதிகாரமும், நியாயமும் உங்கள் பக்கம் இருந்தாலும், எதிர்த் தரப்பினரை மன்னிக்க வழி இருக்கிறதா என்று பாருங்கள்.

G Geniuness

எந்த விஷயத்தையும் நேர்மையாகக் கையாளுங்கள்.

H Honesty

தவறு செய்தால் உடனே மன்னிப்பு கேட்பதைக் கௌரவமாகக் கருதுங்கள்.

I Inferiority complex

எவரையும் பார்த்து பிரமிக்காதீர்கள். நான் ஏன் இப்படி

இருக்கிறேன் என்ற தாழ்வு மனப்பான்மையை விடுங்கள்.

**J** **Jealousy**

பொறாமை வேண்டவே வேண்டாம். அது கொண்டவரையே கொல்லும்.

**K** **Kindness**

இனிய இதமான சொற்களை மட்டுமே பயன்படுத்துங்கள்.

**L** **Loose Talk**

சம்பந்தமில்லாமலும், அர்த்தமில்லாமலும் பின் விளைவு அறியாமலும் பேச வேண்டாம்.

**M** **Misunderstanding**

மற்றவர்களைத் தவறாகப் புரிந்து கொள்ளாதீர்கள்.

**N** **Neutral**

நடுநிலை தவறாதீர்கள்.

**O** **Over Expectation**

அதிகமாக ஆசைப்படாதீர்கள்.

**P** **Patience**

அமைதியை கடைப்பிடியுங்கள்.

**Q** **Quietness**

கூடுமானவரை சண்டையில் பேசாதீர்கள்.

**R** **Roughness**

பண்பில்லாத வார்த்தைகளையும், தேவையில்லாத மிடுக்கையும் காட்டாதீர்கள்.

**S** **Stubborness**

பிடிவாதம் பிடிக்காதீர்கள்.

**T** **Twisting**

இங்கே கேட்டதை அங்கேயும், அங்கே கேட்டதை இங்கேயும் பேசுவதை விடுங்கள்.

**U** **Underestimate**

மற்றவர்களுக்கும் மரியாதை உண்டு என்பதை மறவாதீர்கள்.

**V** **Valuntary**

அடுத்தவர் இறங்கி வரவேண்டும் என்று காத்திராமல் நீங்களே பேச்சை முதலில் தொடங்குங்கள்.

**W** **Wound**

எந்தப் பேச்சும் செயலும் யார் மனதையும் காயப்படுத்தாமல் இருக்கட்டும்.

**X** **Xerox**

நம்மை மற்றவர்கள் எப்படி நடத்த வேண்டும் என்று எதிர்பார்க்கிறோமோ, அப்படியே மற்றவர்களை நாம் நடத்துவோம்.

**Y** **Yield**

முடிந்தவரை விட்டுக் கொடுங்கள். விட்டுக் கொடுப்பவர்கள் கெட்டுப் போவதில்லை; கெட்டுப் போகிறவர்கள் விட்டுக் கொடுப்பதில்லை.

**Z** **Zero**

இவை அனைத்தையும் கடைப்பிடித்தால் பிரச்சனை என்பது பூஜ்ஜியம் ஆகும்.

ஒரு முட்டாள் தன்னை முட்டாள் என்று உணரும் தருணத்தில் புத்திசாலியாகின்றான்
ஒரு புத்திசாலி தன்னை புத்திசாலி என்று பெருமை கொள்ளும் கணத்தில் முட்டாளாகின்றான்





இயற்பியல் ஏவுகணையாக திகழும் எம் கலாம்.......
ராமேஸ்வரம் பெற்றெடுத்த ரத்தினம்......
விஞ்ஞானத் துறையில் தன் வறுமையை
நினைவில் கொள்ளாமல் வளர்த்தெடுத்து
இந்திய ஏவுகணைத் துறையில் நமக்காக தத்துக்கொடுத்து.....
கனவுகளையே தன் வாழ்வில் இலட்சியமாகக் கொடுத்து......
மாணவர் மனதினில் மன்னனாக வளர்ந்து.....
என்றும் மங்காத கல்வி அறிவை மாணவர் மேல் தெளித்து......
விருதுகளே தன்னை எடுத்துக்கொள்ளும்படி வரிசையில் நிற்க வைத்து....
வானை நோக்கி ஏவுகணையை விடுத்தவர்!
தன் பிறப்பை சம்பவமாக்கி, இறப்பை சரித்திரமாக மாற்றி அமைத்தவர்......
மத்திய அரசையே தன் அறிவால்
மயக்கி 'பத்ம பூஷன்' விருதை பெற்றவர்
தன் தோல்வி ஒவ்வொன்றையும் தன்
தோழனாக எண்ணி தன் தோளையே தட்டி துணிந்து எழுந்தவர்.....
பார்ப்பவர் ஒவ்வொருவரிடமும் இருந்து பெற்ற
திறமையை தன் வாழ்விலும் வளர்த்துக் கொண்டவர்.....
பாரபட்சம் பார்க்காமல் பல ஏவுகணைகளை
விண்வெளியில் பறக்க விட்டவர்....
பெற்ற சிறப்புகளில் பெருமை காட்டாமல்
பொறுமையோடு ஏவுகணையில் போராடியவர்.....
தகர்த்தெரிய முடியாத தங்க தகடு அவர்....
குறளையே தன் வாழ்வில்
குன்றாக அமைத்து சிகரம் தொட்டவர் அவர்....
மாணவர்களின் மனதில் நீங்கா இடம்பிடித்த மன்னரவர்......
காலங்கள் பல கடந்தபின்னும் கரைப்பிடிக்காத கம்பியவர்.....
கொடிகளே கலாம் கலாம் என்று பாடிய அப்துல் கலாம் இவர்......


**ஜே.சோனா**
முதுகலைத் தமிழ் - முதலாமாண்டு.

கவிதை

# செல்வம் (மாடு)



அன்று மனிதர்கள் வயிறு நிறைய
வயலில் ஏர் உழுதாய்!
இன்று நீயே உணவானாய்
வருடத்தில் ஒரு நாள் நீ விழா காண்கிறாய்!
பின்பு நீயே விலையாகிறாய்!
அன்று உழவர்களின் தெய்வமானாய்!
இன்று உன்னை மறந்த அவர்கள்
இயந்திரத்தை தெய்வமாக்கி விட்டனர்!
உயிர் உள்ளவரை மதிப்பற்ற ஜீவன் நீ!
உயிர் போனபின்னோ நல்ல மதிப்பானாய்!
உன் தோலும் விலையாக!
மாடு என்றால் செல்வம் அன்றோ!
நீ இருந்தாலும் இறந்தாலும் செல்வமானாய்!



**சே.ஜெயஸ்ரீ**
இளங்கலைத் தமிழிலக்கியம்
மூன்றாமாண்டு

புதுக்கவிதை


## தோழி



அன்பு என்னும் செடியில்
ஆயிரம் பூக்கள் பூத்தாலும்
அதில் உன் புன்னகை
வாடா மலராக காட்சியளிப்பது ஏனோ!


என்நினைவை அலைய வைத்த
உன்பேச்சு இதயத்தை காக்க வந்த
இறவாக் கனி ஆகுமோ! - நீ
என்றும் உடம்பை பிரியா - உயிராக
இப்பாரில் விளங்க நான் விரும்புகின்றேன்!

பெ.மகாலட்சுமி
தமிழ் இலக்கியம் - இரண்டாமாண்டு.




**சங்கீதா.கு**
இளங்கலை தமிழிலக்கியம்
மூன்றாமாண்டு


கார் காலத்தில் சூரியனை மறைத்தாயே
கார்மேகமே உனக்கு!
சூரியன் மேல் கடுஞ்சினமோ! தூது
அனுப்பு காற்றினையே!



சாளரத்தினோரம் நின்ற சாரலை இரசித்த
காலங்கள் சென்றன!
இன்றோ
சாலையின்னோரம் வாகனத்தின் புகைச் சாரலை
முகச்சுழிப்புடன் சலிக்கிறேன்!

# வற்றும் நீர்நிலைகள்

யாழின் நரம்பை சிறையாகக் கொண்டு
திரியும் கயலேவுன் தண்மிகுந்த - சின்ன
இதழாலென் கன்னத்தில் ஈரம் பதித்த
தருணத்தில் வில்புருவம் கொண்டயென் கண்களுக்கு
தென்றலை ஈர்த்தன போலும் நினைவு:
அலைமோதும் சாகரத்தை மிஞ்சிய வண்ணம்
உனது குடிமறையும் இன்றைய நாளெண்ணி
துன்ப மடைகிறேன் நான்.

பாவகை : பஃறொடை வெண்பா


**பே.பராசக்தி**
இளங்கலைத் தமிழிலக்கியம் மூன்றாமாண்டு

# சொல் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| மை | ஐ | ஆ | ன் | ச | தா | தி | ர | பா |
| ஒ | ன் | று | ப | ங் | கு | தொ | டு | ல |
| அ | ழை | அ | ம் | மா | ம | ல | ரு | சு |
| ப் | பு | ணி | கூ | டு | வீ | டு | ம் | ப் |
| பெ | ண் | ல் | ர | ஈ | பூ | வி | ல் | ஏ |
| ம | கா | த் | மா | கா | ந் | தி | மூ | ம |
| இ | மு | ல் | லை | வி | லை | பு | ன் | ணி |
| பா | ர | தி | யா | ர் | அ | தி | று | ய |
| ம் | நீ | நி | ல | ம | க | ள் | ஆ | ம் |

**வினா :**

1. மகாகவி என்று போற்றப்படுபவர் யார்?
2. தேசிய தந்தை என்று போற்றப்படுபவர் யார்?
3. நிலவுப்பூ என்னும் நூலின் ஆசிரியர் யார்?
4. கடலாடை அணிந்து இருப்பவள் யார்?
5. பாண்டியன் பரிசு என்ற நூலின் ஆசிரியர் யார்?
6. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை எத்தனை மொழிகளில் புலமை பெற்றவர்?

**வி.உமாமகேஸ்வரி**
முதலாம் ஆண்டு-உயிர் வேதியியல்

**விடை:**
1. பாரதியார் 2.மகாத்மா காந்தி 3. பாலசுப்ரமணியம் 4. நிலமகள்
5. பாரதிதாசன் 6. மூன்று

## மாணவர்களின் மனதில் அப்துல்கலாம்

மாணவர்களின்,
மனம் என்னும் கடலில்,
குருதிகள் என்னும் உயிரோட்டத்தில்
விழிப்பு என்னும் அணுக்களாய் பாயும் மன்னவனே!

விதைகளாய் விழும் எண்ணங்களால் எழும்
இன்றைய தூண்களைச் செதுக்கிய தென்னவனே!



அசோகச்சக்கரமாய்! முதுகெலும்பாய்!
இந்நாட்டை நிமிர்த்திய ஏவுகணை நாயகனே!
வல்லரசு என்னும் வார்த்தையையே வாழ்வாதாரம்
என்று புகட்டிய வல்லவனே!
இயற்கை என்பது ஓர் உயிரினம் என்பதை உணர்த்தி
அதை தலைமுறைகள் காக்க முற்பட்ட செழுமை மிக்கவனே!
எங்கள் மனதில் வெற்றி வாகை இடத்தை பிடித்த
திரு.அப்துல் கலாம்!! வாழ்க! வாழ்கவே!!

து.கலைவாணி
முதுகலை ஆங்கிலம்-இரண்டாமாண்டு.


## அம்மா..

என்னை முதலில் பார்த்தவளும் நீயே!
என் அழுகையைத் தீர்த்தவளும் நீயே!
என் முதல் சிரிப்புக்கு காரணமும் நீயே!
என் உள்ளத்தின் முதல் வார்த்தையும் நீயே!
முதல் மூச்சும் உன்னிடம் இருந்தே!
அம்மா..! என் முழு உலகமும் நீயே!
உனக்கே என் அன்பு முத்தங்கள்!



-க.ரேவதி
முதலாம் ஆண்டு-வணிகவியல்

# தூரிகைத் தூரல்கள்



ஜி.தெய்வதர்ஷினி
மூன்றாம் ஆண்டு
கணக்கியல்

# தூரிகைத் தூரல்கள்




அ.ஜாஸ்மின்
மூன்றாம் ஆண்டு
கணக்கியல்



ரா.வினிஷா
முதலாம் ஆண்டு, இளங்கலை
தமிழ் இலக்கியம்

# தூரிகைத் தூரல்கள்




தூரணி சுப்ரமணியன்
மூதலாம் ஆண்டு
கணக்கியல்



கார்த்திகா.கே
இரண்டாம் ஆண்டு
ஆங்கிலம்



**சி.யாமினி**
முதலாமாண்டு கணக்கியல்



தலைவர்களை கண்டுபிடியுங்கள்



தீப்திஸ்ரீ
முதலாமாண்டு வணிகவியல்



மோ.பிரசன்னா
முதலாமாண்டு வணிகவியல்